# ஸ்பெயின் நாட்டின் முதலீட்டாளர்களுடன் முதல்வர் சந்திப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாட்டில் இத்துறைகளில் முதலீடுகள் செய்ய ஆக்சியானா நிறுவனம் ஆர்வம் தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, பீங்கான் மற்றும் வீட்டுக் கட்டுமான பொருட்களின் உற்பத்தியில் உலக அளவில் முன்னணி நிறுவனமாக திகழும் ரோக்கா நிறுவனத்தின் சர்வதேச இயக்குநர் Mr.Carlos Velazquez அவர்களும் இந்திய இயக்குநர் நிர்மல் குமார் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்கள்.

**ரோக்கா நிறுவனம்மூலம் 200 பேருக்கு புதிய வேலைவாய்ப்பு!**

இச்சந்திப்பின்போது, ரோக்கா நிறுவனம், தற்போது தமிழ்நாட்டில் பெருந்துறையிலும், இராணிப்பேட்டையிலும் செயல்பட்டு வரும் நிலையில், இந்தியாவில் இந்த நிறுவ னத்தின் விற்பனையை மேலும் உயர்த்திடவும், சர்வதேச ஏற்றுமதிக்காகவும், இதன் விரிவாக்கத்தையும் புதிய தொழில் அலகுகளையும் தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். தொழில் துறை அமைச்சர் அவர்களும் இத்துறையில் முதலீடு செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாட்டில் நிலவி வரும் சாதகமான சூழல் பற்றி விளக்கினார்கள்.

இந்த கூட்டத்தின் முடிவில், ரோக்கா நிறுவனம் 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்காக உறுதி அளித்துள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் புதிய குழாய்கள் மற்றும் இணைப்புகளை உற்பத்தி செய்யும் புதிய தொழிற்சாலையை நிறுவிடவும், இராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் தற்போது செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்யவும் ரோக்கா நிறுவனம் முன்வந்துள்ளது. இதனால் 200 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்.

இச்சந்திப்புகளின்போது, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு அவர்கள் உடனிருந்தார்.

**மேலும் பல நிறுவனங்களுடன் முதல்வர் சந்தித்து ஆலோசனை!**

இதனை அடுத்து, வரும் நாட்களில் மேலும் பல முன்னணி நிறுவனங்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலீட்டு ஆலோசனைகளை மேற்கொள்ள உள்ளார்கள்.

# "ராணுவ தளவாடம், செல்போன் உற்பத்தியில் இந்தியா முன்னிலை"!

## நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரை!



புதுடெல்லி, பிப். 1 – ராணுவ தளவாடம், செல்போன் உற்பத்தியில் இந்தியா முன்னிலை பெற்றிருப்பதாக நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற இடைக் கால பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இந்த கூட்டத்தொடரில், கூட்டுக் குழு கூட்டத்தில் உரையாற்றுவதற்காக, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, சாரட் வண்டியில், வீரர்களின் அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டார்.

சாரட் வண்டி, நாடாளுமன்றம் வந்தடைந்ததும், பிரதமர் நரேந்திர மோடி, மாநிலங்களவை தலைவரும், துணை குடியரசுத் தலை வருமான ஜெகதீப் தன்கர் உள்ளிட்டோர், குடியரசு தலைவர் திரவுபதி முர்முவை, வரவேற்றனர். பின்னர் அவைக்காவலர்கள் செங்கோலுடன் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை, நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அழைத்து சென்றனர்.

பின்னர், நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு, உரையாற்றினார். அப்போது பேசிய அவர், இந்திய சுதந்தி ரத்தின் அமிர்தப் பெருவிழாவை நாடு கொண்டாடி வருகிறது என்றும், சந்திரயான் 3 திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது பெருமைக்குரியது என்றும் குறிப்பிட்டார்.

உலக அரங்கில் பொருளாதாரத்தில் இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக திரவுபதி முர்மு தெரிவித்தார்.

தமிழ்நாடு உத்தரபிரதேசம் இடையே பாதுகாப்பு வழித்தடம் அமைக்கப்படுகிறது என்றும், செல்போன் உற்பத்தியில் உலகின் 2வது பெரியநாடாக இந்தியா திகழ்கிறது என்றும் குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு, பெருமிதத்துடன் கூறினார். ராணுவ தளவாடங்களின் உற்பத்திக்காக இது வரை ஒரு லட்சம் கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### மாவட்ட ஆட்சியர்கள் கிராமங்களில் தங்கி மக்களைச் சந்திக்கும் திட்டம்

# "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" புதிய திட்டம் தொடக்கம்!

## பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று கோரிக்கை மனுக்கள் அளித்தனர்!

சென்னை, பிப். 1 – மாவட்ட ஆட்சியர்கள் ஒன்றிய அளவில் ஒருநாள் தங்கி, பொதுமக்களின் குறைகளை கேட்டறியும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" எனும் திட்டம் நேற்று தமிழ்நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது. பல்வேறு மாவட்டங்களில் ஆட்சியர்கள் கிராமங்களுக்கு சென்று நேரில் மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மக்கள் நலனை முன்னிறுத்தி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றைத் திறம்படச் செயல்படுத்தி, முத்திரை பதிக்கும் வகையில் சாதனை படைத்து வருகிறது.

அந்த வகையில், அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்குதடையின்றி விரைவாக மக்களைச் சென்றடைய "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" எனும் புதிய திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

இந்த புதிய திட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், ஒன்றிய அளவில் மாதம் ஒரு நாள் தங்கியிருந்து கள ஆய்வில் ஈடுபட்டு மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிகின்றனர்.

ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை, மாவட்ட ஆட்சியர் தலைமையில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் முகாம் நடைபெறும் என்றும் காலை 9 மணி முதல் மறு நாள் காலை 9 மணி வரை 24 மணி நேரம் மாவட்ட ஆட்சியர்கள் கிராமங்களில் தங்கியிருப்பார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் திருச்செந்தூர் அருகே உள்ள ஆத்தூர் பகுதியில் மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மக்களைத் தேடி முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடம் மனுக்கள் பெறுவது முகாமை தொடங்கி வைத்தார். சுகந்தலை கிராமம் தண்ணீர் பந்தல் என்ற இடத்தில் கடம்பா குளம் மறுகாலில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், சீரமைக்கப்பட்டுள்ள சாலைப் பணிகள் மற்றும் புதிதாக உயர்மட்ட பாலம் அமைக்கப்படவுள்ள இடத்தினையும் மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்தில் உள்ள 48 வருவாய் கிராமங்களிலும் அனைத்து துறை அதிகாரிகளும் நேற்று கள ஆய்வில் ஈடுபட்டனர். சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி, வெள்ளார் கிராமத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றார்.

நீலகிரி மாவட்டம் உதகை அருகே உள்ள உல்லத்தி ஊராட்சிக்குட்பட்ட ஏக்குணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர் அருணா முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, மாணவ மாணவிகளுடன் காலை சிற்றுண்டியை அருந்திய அவர் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். பின்னர், மசனகுடி அங்கன் வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் குழந்தைகளின் உயரம் எடை ஆகியவற்றை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கரூர் மாவட்டம் நாகம்பள்ளி ஊராட்சி மலைக்கோவிலில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாவட்ட ஆட்சியர் தங்கவேல் ஆய்வு மேற்கொண்டார். அங்கு நோயாளிகளிடம் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து அரவக்குறிச்சி ஒன்றியம் புங்கம்பாடி மேல் பாகம் ஊராட்சி செயல் பட்டு வரும் நியாய விலை கடையை ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பத்தூர் ஏலகிரி மலை கிராமத்தில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ் ஆய்வு மேற்கொண்டார்.

அத்தனாவூர் பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகா தார நிலையம், கால்நடை மருத்துவ மனை, அரசு மேல்நிலைப்பள்ளி, ஊராட்சி மன்ற அலுவலகம், இ – சேவை மையம் மற்றும் கூட்டுறவு சேமிப்புக் கிடங்கு ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற் கொண்டார். பின்னர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்ணிடம் தங்களது இல்லம் தேடி மருந்துகள் வருகிறதா என கேட்ட றிந்தார்.

இதேபோல் தமிழ்நாடு முழுவதும் மாவட்டம்தோறும் ஒரு ஒன்றியம் தேர்வு செய்யப்பட்டு அங்கு ஆட்சியர் தலைமையில் மக்களின் கோரிக்கைகள் கேட்டறியப்படுகிறது. அரசின் சேவைகளை எளிதாகவும், விரைவாகவும் பெற்றிட ஏதுவாக, இந்த முகாமினை பொது மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார். பொது மக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து, எவ்வித தாமதமும் இன்றி அவற்றை நிறைவேற்றிட வழிவகை காண வேண்டுமென்றும் துறை அலுவலர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

### பிரகாஷ் அம்பேத்கரின் வஞ்சித் பகுஜன் அகாதி கட்சி

# இந்தியா கூட்டணியில் புதியதாக இணைந்தது!

*மும்பை, பிப். 1 – மகாராஷ்டிரா மாநிலத்தில் பிரகாஷ் அம்பேத்கரின் வஞ்சித் பகுஜன் அகாதி கட்சியும் இந்தியா கூட்டணியில் புதிதாக இணைந்துள்ளது.*

*வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்த, எதிர்க்கட்சிகள் இணைந்து இந்தியா கூட்டணியை அமைத்துள்ளன.*

*இக்கூட்டணியில் காங்கிரஸ், ஆம்ஆத்மி, தி.மு.க., சமாஜ்வாதி, ராஷ்டிரிய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், இடதுசாரி கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில், இந்தியா கூட்டணியில் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த வஞ்சித் பகுஜன் அகாதி கட்சி புதிதாக இணைந்துள்ளது.*

*இது தொடர்பாக அக்கட்சியின் தலைவரும் டாக்டர் அம்பேத்கரின் பேரனுமான பிரகாஷ் அம்பேத்கர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், வஞ்சித் பகுஜன் அகாதி, இந்தியா கூட்டணியில், காங்கிரஸ், தேசியவாத ஆகிய கட்சிகளுடன் இணைந்து நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் என்று தெரிவித்துள்ளார்.*

*இதனை தொடர்ந்து, மகாராஷ்டிரா மாநில இந்தியா கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக்கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.*

### விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று கூறிய மோடி ஆட்சியில்

# தினம் தினம் 30 விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு!



*புதுடெல்லி, பிப். 1 – விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று ஆட்சிக்கு வந்த பா.ஜ.க.வின் ஆட்சியில், இன்று தினமும் 30 விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். கடந்த 2014ம் ஆண்டை விட விவசாயிகளின் கடன் 60 சதவிதம் அளவிற்கு அதிகமாக இருக்கும்போது, கடந்த 10 ஆண்டுகளில் தொழிலதிபர்களின் ஏழரை லட்சம் கோடி ரூபாய் கடன்களை மோடி அரசு தள்ளுபடி செய்துள்ளதாக ராகுல் காந்தி சாடியுள்ளார்.*

*பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளின் பங்கான 2 ஆயிரத்து 700 கோடி ரூபாயை பிடித்தம் செய்த தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் 40 ஆயிரம் கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள ராகுல்காந்தி, உரங்கள், விதைகள், மின்சாரம் உள்ளிட்டவற்றின் விவசாயச் செலவுகள் எகிறிக் கொண்டிருக்கும் சூழலில், குறைந்தபட்ச ஆதரவு விலையைக் கூட பெற முடியாமல் விவசாயிகள் திணறி வருவதாக வேதனை தெரிவித்துள்ளார்.*

### இந்து சமய அறநிலையத்துறையின்

# சட்டமன்ற அறிவிப்புகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்திட வேண்டும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அலுவலர்களுக்கு அறிவுரை!

*சென்னை, பிப். 1- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (30.01.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 30 வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், 2021 - 2022 முதல் 2023 - 2024 வரையிலான நிதியாண்டுகளில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், குறிப்பாக ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் (Master Plan) கீழ் 15 திருக்கோயில்களில் நடைபெற்று வரும் திருப்பணிகள், 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில் திருப்பணிகள், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பகுதியிலுள்ளதிருக்கோயில்களின் திருப்பணிகள், ரூ.1 கோடி மதிப்பீட்டிற்கு மேல் நடைபெற்று வரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகள் மற்றும் நில அளவை பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார்.*

*அதனைத் தொடர்ந்து, திருக்கோயில்களில் அமைந்துள்ள பசுமடங்களை மேம்படுத்துதல், மலைத் திருக்கோயில்களுக்கு கம்பிவட ஊர்தி மற்றும் மின்தூக்கி அமைத்தல், புதிய திருத்தேர்கள் உருவாக்கும் பணிகள் மற்றும் மராமத்து பணிகள், உலோகத் திருமேனி பாதுகாப்பு அறை கட்டுமானம் போன்ற பணிகளின் முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நலன் சார்ந்த திட்டங்கள் செயலாக்கம்,திருக்கோயில்களில் வழங்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினை உறுதி செய்திட அமைக்கப்பட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்களின் பணி முன்னேற்றம், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய பணி கள் ஆகியவை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.*

*நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறையில் ரூ.4,157.70 கோடி மதிப்பீட்டில் 18,788 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல பணிகள் நிறைவுற்றும், சில பணிகள் நடைபெற்றும் வருகின்றன. இதில் உபயதாரர்கள் மூலம் ரூ.1,253 கோடி மதிப்பீட்டில் 7,655 பணிகள் நடைபெற்று வருகிறது. சட்டமன்ற அறிவிப்புகளின்படி முடிவுற்ற பணிகளைத் தவிர்த்து இதர அனைத்துப் பணிகளையும் குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்திட மண்டல இணை ஆணையர்களும், பொறியாளர்களும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுரைகளை வழங்கினார்.*

*இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.*




இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் 29.01.2024 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் புதிய பேருந்து வழித்தடத்தை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

### மாதவரம் – நல்லூர் சுங்கச்சாவடி வரை

# விரைவான போக்குவரத்தை சீர்செய்ய ஆய்வு!

## ஒப்பந்தம் கையெழுத்து!

*சென்னை, பிப். 1 - மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் முதல் நல்லூர் சுங்கச்சாவடி வரையிலான விரைவான போக்குவரத்து அமைப்பின் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கான போக்குவரத்து தேவை முன்னறி விப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*இந்தப்பணி, Almondz Global InfraConsultant Limited & Four Wall Consultancy ஆகிய கூட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.*

*மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் முதல் நல்லூர் சுங்கச்சாவடி வரை 10 கி.மீ. நீளத்திற்கு விரைவான போக்குவரத்து அமைப்பின் சாத்தியக்கூறுகளுக்கான போக்குவரத்து தேவை முன்னறிவிப்பு அறிக்கையை தயாரிப்பது இப்பணியின் நோக்கம் அடங்கும்.*

*சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன் மற்றும் Almondz Global Infra Consultant நிறுவனத்தின் தலைவர் கே.ஆர்.குமார் மற்றும் Four Wall Consultancy நிறுவனத்தின் திட்ட மேலாளர் ஆர்.தணிகைவேல் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.*

*இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் டி. லிவிங்ஸ்டோன் எலியாசர், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), பொது மேலாளர்கள் டாக்டர். டி.ஜெபசெல்வின் கிளாட்சன், (ஒப்பந்த மேலாண்மை), ஆன்டோ ஜோஸ் மேனாச்சேரி, (சுரங்கப்பாதை), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.*

### தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (9)

2024 , பிப்ரவரி 3 சனிக்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜுன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளி வரும் என்று ஏற்கெனவே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, பிப்ரவரி 3 சனிக்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், "முத்தமிழறிஞர் கலைஞருடன் உடன்பிறப்புகளின் நெகிழ்ச்சிமிகு சந்திப்பு" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**